# 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமும் எமக்கானதல்ல! இரா.சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்ற உரையில் தெரிவிப்பு

## தமிழ் மக்கள் பதிலடி வழங்குவரெனவும் எச்சரிக்கை விடுத்தார்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டமும் எமக்கானது அல்ல!, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் குறித்து நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதம் நடந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைச் சேர்ந்த நாங்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை. அதற்கான காரணம் ஜனாதிபதி கடந்த வருடம் - 04.02.2023 அன்று, அதாவது 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழ் மக்களினுடைய தேசிய இனப் பிரச்சினையினை தீர்ப்பதற்கு தான் முயற்சி எடுப்பதாக கூறினார்.

ஆகவே, அவரது கூற்றினை வரவேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் நாங்கள் அந்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து அதனை தோல்வியடைச் செய்ய முடியுமாக இருந்திருந்தால் நாங்கள் அதற்கு வாக்களித்திருப்போம்.

2023 ஆம் ஆண்டிற்குள்ளே தமிழ் மக்களுக்கு எவ்வித நலன் சார்ந்த விடயமும் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக 30 வருட காலமாக நிகழ்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மற்றும் வட மாகாண மக்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித நிதியும் ஒதுக்கப்படவில்லை. 2 ▶



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 27 வியாழக்கிழமை 14.12.2023 கதிர் 134

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## பேருந்துக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு



வற் வரி அதிகரிப்புடன், ஜனவரி மாதத்தில் பேருந்துக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம் எனவும், இது தொடர்பாக எதிர்காலத்தில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதல் பேருந்துகள் இறக்குமதியின் போது, சராசரியாக பேருந்து ஒன்றின் விலை ஒரு கோடியே 57 இலட்சமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வற் வரியின் 18 சதவீத அதிகரிப்புடன், குறைந்த பட்சம் 20 இலட்சம் ரூபாவால் அதிகரிப்பு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 2 ▶



## மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபர் நியமனம்

(கே.எ.ஹமீட், எம்.எப்.நவாஸ்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக திருமதி.முரளிதரன் இன்று நியமனம் பெற்றுள்ளார். இலங்கை நிர்வாக சேவை தரத்தின் விசேட தரத்தையுடைய ஒரு சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான இவர் கிழக்கு மாகாண சபையில் பல்வேறு நிர்வாகப் பதவிகளை வகித்திருந்ததோடு இறுதியாக கிழக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

இவருக்கான நியமனமானது இன்று கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ. சந்திரகாந்தன் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் 2 ▶

## பால் பண்ணைகளை பதிவு செய்வதற்காக ஜனவரி மாதத்தைப் பிரகடனப்படுத்துக!

### அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை



நாட்டிலுள்ள அனைத்து பால் பண்ணைகளையும் பதிவு செய்வதற்கான கால்நடை அபிவிருத்தி மாதமாக ஜனவரி மாதத்தை பிரகடனப்படுத்துமாறு விவசாய அமைச்சின் கால்நடை அபிவிருத்திப் பிரிவிற்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை வழங்கியுள்ளார்.

தற்போது, நாட்டில் 290,592 கால்நடை பண்ணைகள் உள்ளன, ஆனால் அவற்றுள் 58,137 மட்டுமே விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது. இவற்றில் பெரும்பாலானவை 2 ▶

## டெங்கு நோயாளர் எண்ணிக்கை பல பிரதேசங்களிலும் அதிகரிப்பு!

நாடளாவிய ரீதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி, பதுளை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

## இன்று நள்ளிரவு விண்கல் மழை ஆர்தர் சி கிளார்க் மையம் தகவல்

இன்று நள்ளிரவு விண்கல் மழையை அவதானிக்க முடியும் என ஆர்தர் சி கிளார்க் மையம் அறிவித்துள்ளது.

பைத்தான் 3200 சிறுகோளில் இருந்து வெளியேறிய துகள்கள் பூமியைக் கடந்து செல்வதால் இது நிகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பைத்தான் 3200 சிறுகோளின் துகள்கள் பூமியின் வளிமண்டலத்தில் மோதிய பிறகு இந்த விண்கல் மழையை அவதானிக்க முடியும் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மயிலத்தமடு – மாதவனை பிரதேசத்தில் பொலிசார் விசேட தேடுதல் நடவடிக்கை

மட்டக்களப்பு - மயிலத்தமடு - மாதவனை பிரதேசத்தில் கால்நடைகளைத் தொடர்ந்து திருடி வருபவர்கள் மற்றும் அவற்றைக் கொலை செய்பவர்களைக் கைது செய்வதற்கான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக குறித்த பகுதியில் 50 பேர் கொண்ட பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. 2 ▶

# கல்முனை கார்மேல் பற்றிமா மாணவர்கள் தேசிய ரீதியிலான போட்டியில் சாதனை



(வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சு தேசிய ரீதியில் நடாத்திய இரு மொழிக் கல்வி தரம் 6-9 வரையான வகுப்பு மாண வரிடையே நடத்தப்பட்ட நிறைபேறான அபிவிருத்தி தொடர்பான முன்வைப்பு (“Sustainable Living: Our Responsibility” presentation) தேசிய போட்டியில் கல் முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கொழும்பு பெலவத்தை பத்தரமுல்லயில் நடைபெற்ற இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் கலந்து கொண்ட இத்தேசிய ரீதியிலான போட்டியில் மூன்றாவது இடத்தை பற்றிமா மாணவர்கள் தனதாக்கிக் கொண்டனர்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் வழிகாட்டலில்,

பிரதி அதிபர் அருட்சகோதரி எம். பிரியசாந்தி மற்றும் ஆசிரியர் பி.சயந்தன் ஆகியோரது பயிற்சியில் இம் முன்வைப்பு போட்டியில் சிறப்பான முன்வைப்புகளை முன்வைத்தனர்.

தரம் 6 சார்பாக ரி. மிருஷானன், தரம் ஏழு சார்பாக சு.தவேஸ்ஹர், தரம் எட்டு சார்பாக கே. பீஷ்மன் , ஏ எஸ் முகமது சுலைம், தரம் ஒன்பது சார்பாக ஹியூமன் றொட்கர் ஆகிய மாணவர்கள் பங்கு பற்றினர்.

முன்னதாக கல்முனை மாவட்டமட்ட போட்டியிலே கல்முனை கார்மேல் பற்றிமா அணி முதல் இடத்தை பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவாகி இருந்தது.

பின்னர் கிழக்கு மாகாண மட்ட போட்டியில் முதல் இடத்தை மட்டக்களப்பு புனிதமைக்கேல் கல்லூரியும் இரண்டாம் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியும் மூன்றாம் இடத்தை மட்டக்களப்பு சிசிலியா மகளிர் பாடசாலையும் பெற்றுக் கொண்டது தெரிந்ததே.

## 2024 ஆம் ஆண்டுக்கான வரவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் இந்த அரசாங் கத்தினால் இழைக்கப்படும் பாரிய கொடுமைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் கால்நடைகளைச் சுட்டு அழித்துக் கொண்டிருக்கும் கொடூரச் செயல் 90 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இன்று தொல்பொருள் என்ற பெயரில் இனவாதிகள் இணைந்து வடக்கு, கிழக்கில் இருக்கும் எங்களின் ஆலயங்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில், குறித்த வரவு செலவுத் திட்டத்திற்கு வடக்கு, கிழக்கினை பிரதிநிதித்துவப்ப டுத்தும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு ஆதரவு வழங்கலாம்? என எமது மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும்.

அத்துடன், இவ்வரவு செலவுத் திட்டத்திற்கு சார்பாக வாக்களிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கும் எமது தமிழ் மக்கள் எதிர்காலத்தில் சிறந்த பதிலடியினை வழங்குவார்கள், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## பேருந்துக் கட்டணங்களில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், உதிரிப் பாகங்களின் விலை, எண்ணெய் விலை, சேவைக் கட்டணங்கள் அனைத்தும் அதி கரிக்கின்றன என்றும், எரிபொருளின் மீது வற் வரி அறவிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால், டீசலின் விலையும் அதிகரிக்கும் என்ப தால் மீண்டும் ஒருமுறை பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், விரைவில் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இது குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## பால் பண்ணைகளை பதிவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாளைக்கு 100 லீற்றருக்கும் குறைவான பாலை உற்பத்தி செய்யும் பண்ணைகளாகும்.

பால் பண்ணைகள் பதிவு செய்யப்படாமையால், கறவை மாடு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் பல்வேறு சலுகைச் சேவைகள் கிடைப்பது கடினமாகி விட்டதாகவும், கால்நடைப் பொருட்கள் தொடர்பான துல்லியமான தரவுகளைத் தயாரிப்பதற்காகவே இந்தப் பண்ணைகளைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது, பால் பண்ணைகள் மூன்று பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, வாழ்வாதார நிலைப் பால் பண்ணைகள், 100 -1000 விலங்குகள் உள்ள பண்ணைகள் மற்றும் 1000 க்கும் மேற்பட்ட விலங்குகள் கொண்ட பெரிய அளவிலான பால் பண்ணைகள் என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெதி-08)

## மயிலத்தமடு - மாதவனை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரைப் பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறிய பெரும்பான் மையின மக்கள் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை அங்கி ருந்து வெளியேற்றுமாறு கோரி கால்நடை வளர்ப்புப் பண்ணையாளர் சங்கத்தினர், கடந்த 90 நாட்களாக தொடர்ச்சியாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. கே.டி.என். ரஞ்சித் அசோக ஆகியோர் முன்னிலையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் வழங்கி வைக்கப்பட்டது.








## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு இடம்பெற்றது






(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தின் முதல் மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

சிறப்பு பார்வையாளர்களாக சம்மாந்துறை வலயக் கல்வி பணிமனையின் வலய மாணவர் நாடாளுமன்ற இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எச். நைரூஸ்கான், பாடசாலை வலுவூட்டல் மேம்பாட்டு நிகழ்ச்சி திட்ட இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அதிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிபர் ஆசிரியர்கள் பான்ட் வாத்தியம் முழங்க பிரதான வீதியிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

தேசியக் கொடியை உதவிக்கல்விப் பணிப்பாளர் எச்.நைரூஸ்கான், மாகாண கொடியை உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பாடசாலை கொடியை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் ஆகியோர் ஏற்றியதும் தேசிய கீதம் மற்றும் பாடசாலை கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் நாடாளுமன்றத்தில் செயலாளர் நாயகம் அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் சபாநாயகர் மற்றும் பிரதமருக்கு நியமனங்களை வழங்கி வைத்தார்.

தொடர்ந்து அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அமைச்சர்களின் கன்னி உரையும் இடம்பெற்றன.

உதவிக்கல்விப் பணிப்பாளர் எச்.நைரூஸ்கான், உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் அமர்வு பற்றி அவதானிப்புரையாற்றினர்.

முறையான பாராளுமன்ற அமர்வு போன்று மாண வர் நாடாளுமன்ற நிகழ்வு முறைப்படி செங்கோல் சபாநாயகர் பிரசன்னத்துடன் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் நடைபெற்றது. நிகழ்வுகள் அனைத்தும் மும்மொழிகளிலும் அறிவிப்பு செய்யப்பட்டது. சிரேஸ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரன் நன்றியுரையாற்றினார்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் டெங்கு தொடர்பான செயற்குழுக் கூட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் டெங்கு செயற்குழுக் கூட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நேற்று மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் காலங்களில் பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், மாவட்டத்தில் கடந்த காலங்களில் டெங்கு பரவிய விதம்,டெங்குவை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், மழைக்காலம் காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயமுள்ள பகுதிகளை கண்டறிந்து வாராந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பது பற்றியும் பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், பொலிஸ் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சுய தொழில் மேற்கொள்வதற்கான உபகரணங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்கல்



(எம்.எப்.நவாஸ்)

இஸ்லாமிக் ரிலீப் இனால் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினருக்கு தங்களது எதிர்கால சுய தொழிலை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ. சி. அகமது ஷாபிர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபீர் இஸ்லாமிக் ரிலீப் திட்ட இணைப்பாளர் சசிகரன் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.



# காஸா போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்! ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றம்



காஸாவில் நடத்தப்பட்டுவரும் போர் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், அங்குள்ள பிணைக் கைதிகளை எந்த நிபந்தைனையுமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை இந்தியா உட்பட 153 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன.

193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையின் சிறப்பு அவசரக் கூட்டம் செவ்வாய்க்கிழமை கூடியது. கூட்டத்தின்போது எகிப்து சார்பில் காஸாவில் இஸ்ரேலால் நடத்தப்பட்டு வரும் போரை மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், அங்குள்ள பிணைக் கைதிகளை எந்த நிபந்தைனையுமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும், இதுதொடர்பாக உறுப்பினர்கள் சர்வதேச விதிகளுக்கு உட்பட்டு தங்கள் ஆதரவைத் தெரிவிக்க வேண்டும் என்றும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற வாக்கெடுப்பில் இத்தீர்மானத்துக்கு எதிராக 10 நாடுகள் வாக்களித்தன. 23 நாடுகள் புறக்கணித்த நிலையில், இந்தியா உள்பட 153 நாடுகள் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

அவுஸ்திரேலியா, இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நிலையில், ஜெர்மனி, ஹங்கேரி, இத்தாலி, உக்ரைன், பிரிட்டன் ஆகிய நாடுகள் தீர்மானத்தைப் புறக்கணித்தன.

இத்தீர்மானத்தில் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் பிணைக் கைதிகளைப் பிடித்து வைத்திருக்கும் ஹமாஸ் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே இதுதொடர்பாக ஒஸ்திரியாவும் அமெரிக்காவும் திருத்தங்களை முன்வைத்தன.

ஐ.நா.பொதுச்சபையில் எகிப்து கொண்டு வந்த வரைவு தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக, தீர்மானத்தில் திருத்தம் செய்யுமாறு ஒஸ்திரியாவும் அமெரிக்காவும் தனித்தனி வரைவுகளைத் தாக்கல் செய்தன.

ஒஸ்திரியா தாக்கல் செய்த வரைவில், ‘பிணைக் கைதிகள்’ என்ற வார்த்தைக்கு முன்னதாக ‘ஹமாஸால் பிடித்து வைக்கப்பட்ட’ என்ற வார்த்தையைச் சேர்க்குமாறு வலியுறுத்தப்பட்டது.

அமெரிக்கா தாக்கல் செய்த திருத்த வரைவில் ‘ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை ஐயத்துக்கு இடமின்றிக் கண்டிக்கிறோம்’ என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்விரு திருத்த வரைவுகளையும் இந்தியா ஆதரித்து வாக்களித்தது.

எனினும் அவையில் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஆதரவை இந்தத் திருத்த வரைவுகள் பெறாததால், இவை பிரதானத் தீர்மானத்துடன் சேர்க்கப்படவில்லை.

இதில் ஒஸ்திரியா கொண்டுவந்த திருத்த வரைவுக்கு 89 நாடுகள் ஆதரவாகவும், 61 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 20 நாடுகள் தீர்மானத்தைப் புறக்கணித்தன.

அமெரிக்கா கொண்டுவந்த திருத்த வரைவுக்கு 84 நாடுகள் ஆதரவாகவும், 62 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 25 நாடுகள் தீர்மானத்தைப் புறக்கணித்தன.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்துக்கு முன்னதாக ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தாமஸ் செவ் வாய்க்கிழமை செய்தியாளர்களோடு உரையாடிய போது,

ஒக். 7-ஆம் திகதி ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலை ஐயத்துக்கு இடமின்றி உலக நாடுகள் அனைவரும் ஒரே குரலில் கண்டிக்க வேண்டும் என்ற கருத்துடன், இத்தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவளிக்கிறது என்றார்.

இதற்கு முன்னர், கடந்த ஒக்டோபரில் காஸா மீதான போரை நிறுத்தக் கோரி ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை ஆதரித்து 120 நாடுகள் வாக்களித்தன. 14 நாடுகள் எதிர்த்தன. இந்தியா உள்ளிட்ட 45 நாடுகள் புறக்கணித்தன. தற்போது இந்தியாவின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (04)

# இந்திய எரிபொருள் தாங்கிக் கப்பல் மீது யேமன் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்!



இந்தியாவிலிருந்து ஜெட் விமான எரிபொருளை ஏற்றிக்கொண்டு, செங்கடல் வழியாகச் சென்று கொண்டிருந்த கப்பல் மீது யேமன் கிளர்ச்சியாளர்கள் எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். எனினும், அந்த ஏவுகணைகள் கப்பல் மீது விழாததால் மிகப் பெரிய சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஜெட் விமான எரிபொருளை ஏற்றிக்கொண்டு கா□நாடகத்தின் மங்களூர் துறைமுகத்திலிருந்து மார்ஷல் ஐலண்ட் கொடியுடன் செங்கடலில் வந்து கொண்டிருந்த ‘ஆர்ட்மர் என்கவுன்டர்’ கப்பலை நோக்கி புதன்கிழமை அதிகாலை 2 எறிணைகள் ஏவப்பட்டன.

முக்கியத்துவம் வாய்ந்த பாப் எல்-மண்டெப் நீரிணைக்கு அருகே அந்தக் கப்பல் வந்துகொண்டிருந்தபோது, ஹூதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள யேமன் பகுதியிலிருந்து அவை வீசப்பட்டன. எனினும், அந்த எறிணைகள் குறிதவறி கடலுக்குள் விழுந்தன.

இந்தச் சம்பவத்தின்போது ஹூதி கிளர்ச்சியாளர்களின் ட்ரோன் ஒன்றை அமெரிக்க போர்க் கப்பல் சுட்டுவீழ்த்தியது என்று அதிகாரிகள் கூறினர்.

ஹூதி கிளர்ச்சியாளர்களால் குறிவைக்கப்பட்ட எரிபொருள் கப்பலில் ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்கள் இருந்ததாகவும், படகில் வந்து அந்தக் கப்பலில் ஏற முயன்றவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அவர்கள் விரட்டியடித்ததாகவும் தனியார் உளவு நிறுவனமான ஆம்ப்ரே கூறியது.

காஸா போர் விவகாரத்தில் எரிபொருள் கப்பல் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளது இதுவே முதல்முறையாகும். எனினும், இந்தத் தாக்குதலுக்கு ஹூதி கிளர்ச்சியாளர்கள் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ/க்கும் இடையிலான போர் தொடங்கியதிலிருந்து, யேமனையொட்டிய கடல் பகுதி வழியாகச் செல்லும் இஸ்ரேல் தொடர்புடைய கப்பல்கள் மீது ஈரான் ஆதரவு பெற்ற ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இரவுகூட, நோர்வே நாட்டுக் கொடியேற்றப்பட்ட சரக்குக் கப்பலொன்றின் மீது யேமன் நாட்டின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் எறிகணை வீசித் தாக்குதல் நடத்தினர். எனினும், இதில் யாரும் காயமடையவில்லை என்று அந்தக் கப்பலை இயக்கி வரும் நிறுவனம் தெரிவித்தது.

இதுபோன்ற தாக்குதல்களால் ராணுவரீதியில் எந்தப் பலனும் இல்லை என்றாலும், யேமனில் தங்களுக்கான ஆதரவைப் பெருக்கிக் கொள்வதற்காக கிளர்ச்சியாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கருதப்படுகிறது. (04)



# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து மூன்று பேர் உயிரிழந்ததாகத் தகவல்

வடக்கு சீனாவின் ஷாங்க்கிசி மாகாணத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நிலக்கரியை சேமித்துவைக்கப் பயன்படுத்தப்படும் பதுங்கு குழியை நான்கு பேர் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு வந்த மீட்புக் குழுவினர் ஒருவரை மீட்டனர். ஆனால் மூவர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலக்கரி உற்பத்தி செய்யும் முக்கிய இடமான ஷாங்க்சியில் உள்ள ஹூவாஜின் கோக்கிங் நிலக்கரி நிறுவனத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

கடந்த ஓகஸ்டில் ஷாங்க்சியில் நிலக்கரி சுரங்க வெடிப்பில் 11 பேர் உயிரிழந்தனர். தெற்கு சீனாவின் குய்சோ மாகாணத்தில் நிலக்கரி சுரங்கத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போதைய விபத்துக்கான காரணம் குறித்து மீட்புப் படையினருடன் இணைந்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (04)

# மூன்று நாடுகள் ஒன்றாக இணைந்து போர் விமானம் உருவாக்க ஒப்பந்தம்



ஜப்பான், பிரிட்டன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ஒன்றாக இணைந்து புதிய ரக போர் விமானத்தை உருவாக்க ஒப்பந்தமிட்டுள்ளன.

சீனா, ரஷியா, வடகொரியா போன்ற நாடுகளால் வலுத்துவரும் அச்சுறுத்தல்களிலிருந்து தங்கள் நாடுகளைப் பாதுகாக்க இந்தக் கூட்டு முயற்சியை மேற்கொள்வதாக அவை தெரிவித்துள்ளன.

ஜப்பான் மற்ற நாடுகளுடன் சேர்ந்து இராணுவ உபரகரணங்களை உற்பத்தி செய்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பேசிய ஜப்பான் பாதுகாப்புத் துறை அமைச்சர் மினாரு கிஷாரா, நாட்டின் வான்வழி பாதுகாப்பை உறுதி செய்ய அதிக திறன்கொண்ட போர் விமானங்களை உருவாக்குவது தவிர்க்க முடியாதது எனக் கூறியுள்ளார். ஜப்பானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் உருவாகிவரும் இந்த நேரத்தில் இந்த புதிய போர் விமானத்தை உருவாக்குவது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடு தனியாக ஒரு போர் விமானத்தை உருவாக்க தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் தேவைப்படும். மூன்று நாடுகளும் இணைந்து இந்த போர் விமானத்தை உருவாக்குவது அந்த வகையிலான நெருக்கடிகளை குறைக்கிறது எனவும் கூறியுள்ளார்.

மிட்சுபிஷி எப் - எக்ஸ் என அழைக்கப்படும் இந்த ஜெட் விமானத்தின் தயாரிப்பு மூன்று நாடுகளில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களின் மேற்பார்வையில் நடைபெறும். இதற்கு ஜப்பான் தலைமையேற்றுள்ள நிலையில், தலைமைப் பொறுப்பு சில ஆண்டுக ளுக்கு ஒரு முறை மாற்றப்பட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் 12 ஆவது வருடாந்த சர்வதேச ஆய்வரங்கு



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடம், Emerald Publishing இன் பங்களிப்புடன் ஏற்பாடு செய்திருந்த "Driving innovation for sustainable Future: Towards a Resilient and Regenerative World" எனும் தொனிப்பொருளிலான 12 ஆவது வருடாந்த சர்வதேச ஆய்வரங்கு வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சபீனா எம்.ஜி. ஹசன் அவர்களது தலைமையில் நேற்று பல்க லைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் கேட்போர் கூடத் திலும் வர்த்தக முகாமைத்துவ பீடத்திலும் இரண்டு அமர்வுகளாக இடம்பெற்றது.

நிகழ்வின் முதலாவது அமர்வில் பேராசிரியர் எஸ் குணபாலன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். அத்துடன் தலைமையுரையை பீடாதிபதி கலாநிதி சபீனா எம்.ஜி. ஹசன் அவர்கள் நிகழ்த்தினார். விழாவின் தொடக்கவுரையை பேராசிரியர் எஸ்.ஆர். கேசவா அவர் கள் நிகழ்த்தினார். ஆய்வரங்குக்கு, உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிகழ்நிலையாக உரையாற்றினார்.

நிகழ்வின் பிரதான பேச்சாளராக பேராசிரியர் காலிட் ஹுசைனி அவர்கள் கலந்துகொண்டு நிகழ்நிலையாக உரையாற்றினார்.

விழாவின் தொடக்கவுரையாற்றிய பேராசிரியர் எஸ்.ஆர். கேசவா மற்றும் பீடாதிபதி கலாநிதி சபீனா எம்.ஜி. ஹசன் ஆகியோர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்ட அதேவேளை வர்த்தக முகாமைத்துவ பீட பேராசிரியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முதலாவது அமர்வின் இறுதியில் ஏஜஆர்சி மாநாட்டின் செயலாளர் ஏ.ஆர்.எப். தபானி அவர்கள் நன்றியுரை யாற்றினார். மாநாட்டின் பொருளாளர் எம்.பி. பாத்திமா சந்ஜீதாவும் பிரசன்னமாகியிருந்தார்.

இரண்டாவது அமர்வில் ஆய்வாளர்களால் முன்வைக் கப்பட்ட 45 ஆய்வுக்கட்டுரைகள் விவாதிக்கப்பட்டு பிரசு ரிக்கப்பட்டன.

நிகழ்வின் மதிப்புரையை பேராசிரியர் எஸ்.அரு ணாச்சலம் அவர்கள் நிகழ்த்தினார். ஆரம்ப நிகழ்வின் போது கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன. பீடாதிப-திகளான பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் கலாநிதி யு.எல். அப்துல் மஜீத் ஆகியோருடன் பேராசிரியர்கள் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித் தோர், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மாணவர்கள் என பலரும் நிகழ்வுகளின்போது பிரசன்னமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.





# காரைதீவு ஆனந்தா முன்பள்ளி சிறார்களின் விடுகை விழா

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு, டிசெ. 14

காரைதீவு ஆனந்தா முன் பாலர் பாடசாலையின் விடுகை விழா அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# "சித்துவிலி சித்தம் கார்ட்டூன்" சுவரொட்டி, கலைப் போட்டி வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ், பரிசுகள் வழங்கல்





(ஹஸ்பர்)

"சித்துவிலி சித்தம் கார்ட்டூன்" சுவரொட்டி, கலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடாத்தப்பட்ட "சித்துவிலி சித்தம் கார்ட்டூன்" சுவரொட்டி மற்றும் கலைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வானது மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இன்று (13) அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நடைபெற்றது.

அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற முக்கிய பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில் சிறுவயதிலிருந்தே இது போன்ற கலைத்துறையில் குழந்தைகளை ஈடுபடுத்துவது, கலைத்திறன்களைக் கொண்ட சிறந்த குழந்தைகளை சமூகத்திற்கு உருவாக்க ஏதுவாக அமைகின்றதெனவும் போட்டியில் கலந்து கொண்ட சிறுவர்களில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றமை மிகவும் சிறப்பு வாய்ந்ததெனவும் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

இதன் போது பல்வேறு பிரிவுகளில் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், குச்சவெளி ,கிண்ணியா பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர். கே.எஸ். குருகுலசூரிய, மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.மு.ஸம்ஸீத் , மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







## 2023 ஆண்டு பெரும்போக நெற்செய்கை 8,000 ஹெக்டெயரில் நோய்த்தாக்கம்

கிளிநொச்சி மாவட்ட பெரும்போக நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கங்களை நேரில் சென்று ஆராய்வதற்காக, கிளிநொச்சிமாவட்ட விவசாயப் பணிப்பாளர் சூரியகுமார் ஜெகதீஸ்வரி உள்ளிட்ட குழுவினர் நேற்றை தினம் வட்டக்கச்சி இராமநாதபுரம் கல்மடு நகர் போன்ற பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை அவர்கள் வழங்கியுள்ளனர்.

இதன் போது, அநேகமான பகுதிகளில் காலாவதியான கிருமி நாசினிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதும், அதனை அவதானிக்காத சில விவசாயிகள் தொடர்ச்சியாக அவற்றைப் பயன்படுத்தி வந்தமையும் கண்டறியப்பட்டது.

எனவே, விவசாயிகள் மிகுந்த அவதானத்துடன் கிருமி நாசினிகளில் ஒட்டப்பட்டுள்ள காலாவதித் திகதிகளைச் சரியாக உறுதி செய்த பின்னர் தங்களது பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யுமாறும், அத்துடன் நோய் தாக்கங்கள் ஏற்படும் பொழுது அருகில் உள்ள கமநல சேவை விவசாய போதனை ஆசிரியரின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே கிருமி நாசினிகளை பயன்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் ஆலோசனை வழங்கினர்.

தற்பொழுது இந்த நோய்த் தாக்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 8,000 ஹெக்டெயர் அளவில் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (02)

## தம்பலகாமம் விவசாயிகள் இடர்கள் குறித்து கவலை

(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் கமநல சேவை பிரிவுக்குட்பட்ட விவசாயிகள் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உரிய நேரத்துக்கு உரப்பசளை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

பாலம் போட்டாறு பகுதியை அண்டிய விவசாயிகள் தங்களது நெற்செய்கையின் போது அரக்கொட்டியான் தாக்கம், ஒரு வகை மஞ்சள் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதனால் விளைச்சல் குறைவாகிடுமோ எனவும் அங்கலாய்க்கின்றனர்.

இதன் காரணமாக அதிக விலையை கொண்ட எண்ணெயை வாங்கிப் பயன்படுத்தினாலும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாகவே காணப்படுவதாகவும் இதனை அதிக விலை கொடுத்து வாங்கி நட்டமடைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் உரிய காலத்துக்கு உரமானியங்களை வழங்குமாறும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2023இல் வெளியிடப்பெற்றது.